# Chapter 5.1
# மொழிபெயர்ப்புக் கல்வி

---

## கற்பவை கற்றபின்

Question 1.
தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல் ஒன்றையும் கலீல் கிப்ரானின் கவிதை ஒன்றின் மொழிபெயர்ப்பையும் நூலகத்தில் படித்து எழுதி வருக.
தாகூரின் கீதாஞ்சலி தமிழ்மொழிபெயர்ப்புப் பாடல்
Answer:

‘நான் எந்தப்பாடலைப் பாடுவதற்காக இங்கு வந்தேனோ
இது இன்றுவரை பாடப்படாமலேயே உள்ளது
என் இசைக்கருவிகளைச் சரிசெய்வதிலேயே
என் நாட்களைக் கழித்துவிட்டேன்

உண்மையில் நேரம் வரவில்லை
வார்த்தைகள் பொருத்தப்படவில்லை
ஆசையினால் வரும் வலி ஒன்றே என் இதயத்தில் உள்ளது
பூமலரவில்லை காற்று பெருமூச்சுவிடுகிறது

நான் அவனது முகத்தைப் பார்த்ததில்லை
அவனது குரலைக் கவனித்தது இல்லை
என் வீட்டிற்கு முன்னாள் உள்ள சாலையில் இருந்து
அவனது மெல்லிய காலடி ஓசையை மட்டும் கேட்டிருக்கிறேன்

Question 2.
மொழிபெயர்ப்புச் சிறுகதை ஒன்றைப் படித்து அதன் கதைச்சுருக்கத்தையும் உங்கள் கருத்துகளையும் வகுப்பறையில் கூறுக.
Answer:
சிப்பிப் புழு ஒன்றின் கதை இது.

சிப்பிப் புழு உலகில் தானே அதி முக்கியமான ஜீவனாக எண்ணியது. பட்டுப் புழுவும் பயன் உள்ளதே ஆனால் பட்டு முத்துக்களைப் போல் அதிக விலை பெற்றுத் தருவது இல்லை. எனவே தன்னை உயர்வாக எண்ணியது சிப்பிப்புழு .

ஒரு நாள் கடலில் பெரும்புயல் வீசியது. சிப்பிப் புழு தன் கூட்டை மூடிக் கொண்டு, பாதுகாப்புக்காகத் தரைக்குப் போகக் கூடாது என்று எண்ணி கடலுக்குள் இருந்தது. ஆனால் இந்த அலை சிப்பிப்புழுவை விட்டு வைக்கவில்லை. அதனைத் தூக்கிக் கடலில் வாரிப் போட்டது. புழு மெதுவாக சிப்பியைத் திறந்து வெளியில் மெதுவாக எட்டிப் பார்த்தது. அதற்குள் மற்றொரு அலை வந்து அதனை மணலில் தூக்கிப் போட்டது. கடலுக்குள் திரும்பிப் போக வழியில்லாமல் அங்கேயே கிடந்தது. அது மிகவும் கோபம் அடைந்தது.

காகம் ஒன்று சிப்பியிடம் வெளியே வா என்றது; ஆனால் சிப்பி புழு, அருவருப்பான முட்டாளான உன்னிடம் பேச முடியாது என்றது. காகம் எவ்வளவு சொல்லியும் சிப்பி புழு வெளிவரவில்லை . மாறாக காகத்தைக் கேலி செய்து கொண்டே இருந்தது. நான் முத்துகளை உண்டாக்குவதால் தான் கடலுக்குப் பெருமை என்று கர்வமாகச் சிப்பி புழு கூறியது. 'முத்து செய்யும் பெரிய நபரைப் பார்க்கின்றேன்' வெளியே வா என்றது காகம். ஆனால் முடிந்தால் நீ பெரிய புத்திசாலி என்றால் என் சிப்பியை நீயே திறந்து கொள் என்றது புழு.

நல்லது நீயே சொல்லி விட்டாய் என்று சொல்லிக் காகம் சிப்பியைத் தன் அலகில் தூக்கி மேலே பறந்து போய்ப் பாறைகள் நடுவே போட்டது. சிப்பி தூள் தூளானது. காகம் சிப்பியைத் தன் அலகால் கொத்தி விழுங்கியது. பிறகு காகம் முத்தைப் பார்த்தது. முத்து அதனிடம் இருந்து விலகி, சாணக்குவியலில் விழுந்தது. காகம் உயரப் பறந்து மகிழ்வுடன் கத்திச் சென்றது.

## பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**Question** 1.
'மாபாரதம் தமிழ்ப்படுத்தும் மதுராபுரிச் சங்கம் வைத்தும்' என்னும் சின்னமனூர்ச் செப்பேட்டுக் குறிப்பு உணர்த்தும் செய்தி ……………………….
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஆ) காப்பியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
இ) பக்தி இலக்கியக் காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
ஈ) சங்கம் மருவிய காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.
**Answer**:
அ) சங்க காலத்தில் மொழிபெயர்ப்பு இருந்தது.

## குறுவினா

Question 1.
தாய்மொழியும் ஆங்கிலமும் தவிர நீங்கள் கற்க விரும்பும் மொழியினைக் குறிப்பிட்டுக் காரணம் எழுது.
**Answer**:
தாய்மொழித் தமிழும் உலகப்பொதுமொழி ஆங்கிலமும் தவிர, நான் கற்க விரும்பும் மொழி இந்தி.

இந்தி கற்க விரும்பும் காரணம் :

- இந்தி நமது நாட்டின் தேசிய மொழி.
- இந்தி இந்திய பாராளுமன்ற மொழி.
- பாராளுமன்ற விவாதங்களை அறிய உதவும் மொழி.
- அரசு மற்றும் தனியார் வேலை வடக்கே கிடைத்தால் துணையாக இருக்கும் மொழி.
- வடநாட்டு மக்களின் பண்பாட்டைப் புரிந்து கொள்ளவும் உதவும் மொழி இந்தி.

# சிறுவினா

Question 1.
உங்களுடன் பயிலும் மாணவர் ஒருவர் பள்ளிப் படிப்பைப் பாதியில் நிறுத்தி வேலைக்குச் செல்ல விரும்புகிறார். அவரிடம் கற்பதன் இன்றியமையாமையை எவ்வகையில் எடுத்துரைப்பீர்கள்?
**Answer**:

- என்னுடன் படித்த மாணவன் வறுமையின் காரணமாக வேலைக்குச் செல்கிறான்.
- நான் அவனைக் கண்டு இளம் வயது படிப்பதற்கு உரியது, பணி செய்வதற்கு அல்ல.
- ஐந்தில் வளையாதது ஐம்பதில் வளையுமா! நாம் இன்று வேலைக்குச் செல்வதால் இன்றைய தேவைதான் பூர்த்தியாகும். நாளைய தேவை பூர்த்தியாகுமா?

**கண்ணுடையார் என்பவர் கற்றோர் முகத்திரண்டு**
**புண்ணுடையார் கல்லா தவர்.**

என்கிறார் வள்ளுவர்.

அப்துல் கலாம் அவர்கள் வறுமையில் வாடினாலும் காலை, மாலை வேலைக்குச் செல்வார். இடைப்பட்ட நேரத்தில் பள்ளிக்குச் சென்றதால் தான் உலகம் போற்றும் உத்தமர் ஆனார். இவர்போல நீயும் உழை;

இடைப்பட்ட நேரத்தில் என்னோடே பள்ளிக்கு வா. படித்துப் பணிக்குப் போகலாம்.

அரசும், தொண்டு நிறுவனமும் உடை முதல் உணவு வரை இலவசமாகத் தருகிறது.

**நாம் கல்வியால் இணைவோம்!**
**நம் தேசத்தைக் கல்வியில் உயர்த்துவோம்!!**

**Question** 2.
ஐக்கிய நாடுகள் அவையில் மொழிபெயர்ப்பு

ஐ.நா.அவையில் ஒருவர் பேசினால் அவரவர் மொழிகளில் புரிந்து கொள்வதற்கு வசதி செய்யப்பட்டிருக்கிறது. மொழிபெயர்ப்பு (Translation) என்பது எழுதப்பட்டதை மொழிபெயர்ப்பது. ஆனால் ஒருவர் பேசும்போதேமொழிபெயர்ப்பது, விளக்குவது என்று (InterPreting)சொல்லப்படுகிறது. ஐ.நா.அவையில் ஒருவர் பேசுவதை மொழிபெயர்க்கும் மொழிபெயர்ப்பாளர் பார்வையாளர்களுக்குத் தெரியாதபடி வேறு இடத்தில் இருப்பார். ஒருவர் பேசுவதைக் காதணி கேட்பியில் (Head Phone) கேட்டபடி சில நொடிகளில் மொழிபெயர்த்து ஒலிவாங்கி வெளியே பேசுவார். அவையில் உள்ள பார்வையாளர் தன்முன் உள்ள காதணி கேட்பியை (Head Phone) எடுத்து பொருத்திக் கொண்டு அவரது மொழியில் புரிந்து கொள்வார்.
**Answer**:
இப்பகுதியில் இருந்து 5 வினாக்களை உருவாக்குக.

1. ஐ.நா.அவையில் உறுப்பினர்கள் தம் மொழியில் பேசும்போது மொழி தெரியாதவர்களுக்கு ஏதேனும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதா?
2. மொழி பெயர்ப்பு என்றால் என்ன?
3. பார்வையாளர்கள் அவையில் பேசுவோர் உரையை எப்படிப் புரிந்து கொள்கின்றனர்?
4. மொழிபெயர்ப்பாளர்கள் எங்கு அமர்ந்திருப்பர்?
5. ஐ.நா.அவையில் பேசுவோரின் பேச்சு எவ்வளவு நேரத்தில் மொழிபெயர்க்கப் படுகிறது?
6. ஐ.நா.அவையில் செய்யப்பட்டுள்ள வசதி யாது?
7. காதணி கேட்பியை எதற்குப் பயன்படுத்துவர்?
8. ‘விளக்குவது’ (Inter Preting) என்றால் என்ன?

## நெடுவினா

**Question** 1.
தமிழின் இலக்கிய வளம் – கல்வி மொழி – பிறமொழிகளில் உள்ள இலக்கிய வளங்கள் – அறிவியல்
கருத்துகள் – பிறதுறைக் கருத்துகள் – தமிழுக்குச் செழுமை.
மேற்கண்ட குறிப்புகளைக் கொண்டு செம்மொழித் தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக் கலை, என்ற தலைப்பில் வார இதழ் ஒன்றுக்கு நடுப்பக்க கட்டுரை எழுதுக.
**Answer**:

## தமிழுக்கு வளம் சேர்க்கும் மொழிபெயர்ப்புக்கலை

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| வரையறை |
| தமிழ் இலக்கிய வளம் |
| கல்வி மொழி |
| பிறமொழி இலக்கியம் |
| அறிவியல் கருத்துகள் |
| பல்துறை கருத்துகள் |
| முடிவுரை |

முன்னுரை :
உலகம் தகவல் தொழில்நுட்பத்தினால் சுருங்கி விட்ட சூழலில் கூட மொழிபெயர்ப்புத் துறை முக்கிய இடம் பெறுகிறது. இத்தகு மொழிபெயர்ப்பு கலை மக்களின் வாழ்வில் எத்தகு போக்கினைச் செய்கிறது என்பது பற்றிக் காண்போம்.

வரையறை:
மொழிபெயர்ப்பு என்பது மூல மொழியில் உள்ள சொல் அல்லது சொற்றொடர்களை எந்தவித பொருள் மாற்றமும் இல்லாமல் வேறு மொழியில் பெயர்ப்பு செய்வது மொழிபெயர்ப்பு எனப்படும்.

தமிழ் இலக்கிய வளம் :
தமிழ் இலக்கிய வளம் பெற வேண்டும் என்றால் பிறமொழியில் சிறந்து விளங்கிய நூல்களைத் தமிழில் மொழிபெயர்ப்பு செய்ய வேண்டும். பல நூற்றாண்டுகளுக்கு முன்னரே இருந்து தமிழில் மொழிபெயர்ப்புப் பணி நடைபெற்று வருகிறது. அதனடிப்படையில் கம்பரின் இராமவதாரம்,

வில்லிபுத்தூராரின் வில்லிபாரதம் போன்ற காவியங்கள் அனைத்தும் மொழிபெயர்க்கப்பட்டவையே.

கல்வி மொழி :
மொழிபெயர்ப்பைக் கல்வியாக்குவதன் மூலம் அனைத்துலக அறிவை நாம் பெற்றுப் பல்வேறு துறையில் சிறந்து விளங்கமுடியும்.

பிறமொழி இலக்கியம் :
ரவீந்திரநாத் தாகூர் வங்க மொழியில் எழுதிய கீதாஞ்சலியை அவர் ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தப் பிறகு நோபல் பரிசு கிடைத்தது.

அறிவியல் கருத்துகள் :
மொழிபெயர்ப்பு அறிவியல் சார்ந்த துறையிலும் தன் ஆதிக்கத்தைச் செலுத்துகிறது. Tele என்ற ஆங்கிலச் சொல் தொலை என்பதைக் குறிக்கும். இதன் அடிப்படையில் Telephone – Telescope – தொலைபேசி, தொலைநோக்கி என்று மொழிபெயர்க்கப்பட்டுள்ளது.

பல்துறை கருத்துகள் :
கல்வி, அறிவியல், இலக்கியம் மட்டுமல்லாமல் பிறதுறையிலும் வளர்ச்சி அடைந்துள்ளன. வானொலி, திரைப்படம், இதழியியல், விளம்பரம் போன்ற துறைகளிலும் மொழிபெயர்ப்புப் பணி சிறந்து விளங்குகிறது. தொலைக்காட்சித் தொடர்கள் வேற்றுமொழிக்கு மாற்றப்படுவதால் அனைத்து மக்களையும் சென்றடைகிறது.

முடிவுரை:
எந்த மொழியின் படைப்பாக இருந்தாலும் எதை மொழிபெயர்க்க வேண்டும்? எப்படிச் செய்ய வேண்டும்? என்பதனை அறிந்து இலக்கண விதிமுறையுடன் செய்தால் நிலைபெற்று விளங்கும்.

# 5.2 நீதி வெண்பா

## கற்பவை கற்றபின்

**Question** 1.
எதிர்காலத்தில் நீங்கள் பயில விரும்பும் கல்வி குறித்து வகுப்பறையில் கலந்துரையாடிக் குறிப்புரை உருவாக்குக.
**Answer**:
ஆசிரியர் : கலை, நீ வருங்காலத்தில் என்னக் கல்வி பெற விரும்புகிறாய்?
கலை : அம்மா, நான் இளங்கலைத் தமிழ் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், உலகமே போற்றும் செந்தமிழ்த்தாயின் பெருமையை நான் அறிந்துகொள்ளவே கற்கின்றேன்.
ஆசிரியர் : நன்று. லில்லி நீ என்ன கற்க விரும்புகிறாய்?
லில்லி : அம்மா, நான் மருத்துவம் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், ஏழைகளுக்கு இலவசமாக உயர் மருத்துவ சிகிச்சை அளிப்பதற்காக.
ஆசிரியர் : நல்லது, நல்லது. சமீனா நீ என்ன கற்க விரும்புகிறாய்?
சமீனா : அம்மா, நான் சட்டம் படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், ஏழைகளுக்கு இலவசமாக சட்டஉதவி செய்வதற்காக.
ஆசிரியர் : ஓ! அப்படியா!
செல்வி : அம்மா, நான் வரலாறு படிக்க விரும்புகின்றேன். ஏனென்றால், பலவகையில் மறைந்துள்ள நம் வரலாற்றை வெளிக்கொண்டு வருவதற்காக.
ஆசிரியர் : நல்லது. உங்கள் முயற்சிக்கு நல்ல பலன் கிடைக்கும். நீங்கள் படிப்பதோடு மட்டுமல்லாமல் நம்மைச் சுற்றியுள்ள சமூகத்தைப் படிக்க வைக்க வேண்டும்.

## பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**Question** 1.
அருந்துணை என்பதைப் பிரித்தால் ………………..
அ) அருமை + துணை
ஆ) அரு + துணை
இ) அருமை + இணை
ஈ) அரு + இணை
**Answer**:
அ) அருமை + துணை

**Question** 2.
“அருளைப் பெருக்கி அறிவைத் திருத்தி
மருளை அகற்றி மதிக்கும் தெருளை”
– என்ற இவ்வடிகளில் குறிப்பிடப்படுவது எது?
அ) தமிழ்
ஆ) அறிவியல்
இ) கல்வி
ஈ) இலக்கியம்
**Answer**:
இ) கல்வி

## குறுவினா

**Question** 1.
செய்குதம்பிப் பாவலரின் கல்வி பற்றிய கருத்தினை முழக்கத் தொடர்களாக்குக.
**Answer**:
கற்போம்! கற்போம்!
அருளைப் பெருக்க கற்போம்!
கற்போம்! கற்போம்!
அறிவினைப் பெற கற்போம்!
கற்போம்! கற்போம்!
மயக்கம் விலக்க கற்போம்!
கற்போம்! கற்போம்!
உயிருக்குத் துணையாக கல்வியைக் கற்போம்!

# 5.3 திருவிளையாடற் புராணம்

## கற்பவை கற்றபின்

Question 1.
இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலத்தை நாடகமாக்கி வகுப்பில் நடித்துக் காட்டுக.

| | |
|---|---|
| **நாடகம்** | இடைக்காடன் பிணக்குத் தீர்த்த படலம் |
| **நாடகமாந்தர்** | இடைக்காடனார் , குலேசபாண்டியன், இறைவன் (சிவன்), கபிலர். |
| **நிகழிடம்** | பாண்டியநாடு |

Answer:
இடைக்காடனார் : மன்னா, வாழ்க! நான் கபிலனின் நண்பன். நான் இயற்றிய பாடலை உங்கள் முன் பாட விரும்புகின்றேன்.
குலேசபாண்டியன் : (கர்வத்தோடும்) பாடும். (இடைக்காடனார் பாடலைப் பாடுகின்றார்)
இடைக்காடனார் : (இறைவனிடம் முறையிடல்) இறைவா! பாண்டியன் என் பாடலைப் பொருட்படுத்தாமல் உம்மையும் பார்வதிதேவியையும் அவமதித்தான்.
இறைவன் : கபிலருக்காகவும் இடைக்காடனாருக்காகவும், இந்தக் கோவிலை விட்டுச் செல்கின்றேன். (இறைவன் கோவிலை விட்டு வெளியேறல்)
குலேசபாண்டியன் : இறைவனே! என்னால், என் படைகளால், என் பகைவரால், கள்வரால், காட்டில் உள்ள விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? வேதங்களைப் பயின்றவர் நல்லொழுக்கத்தில் தவறினாரா? தவமும் தருமமும் சுருங்கியதோ? இல்லறமும் துறவறமும் தத்தம் நெறியில் இருந்து தவறினவோ? எமது தந்தையே யான் அறியேன்.
இறைவன் : இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர வேறு குற்றம் இல்லை. இடைக்காடனார் மீது கொண்ட அன்பால் இங்கு வந்தோம்.
குலேசபாண்டியன் : பார்வதிதேவியை ஒரு பாகத்தில் கொண்ட பரம்பொருளே, புண்ணியனே, சிறியவர்களின் குற்றம் பொறுப்பது பெரியவருக்குப் பெருமையல்லவா? என் குற்றத்தைப் பொறுக்க.
(புலவர்களை ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர வைத்தல்)
குலேசபாண்டியன் : புலவர்களே என்னை மன்னியும்.
இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுக்க .
கபிலர் மற்றும் இடைக்காடனார் : மன்னா! நீர் கூறிய அமுதம் போன்ற குளிர்ந்த சொல்லால் எங்கள் சினமான தீ தணிந்தது.

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**Question** 1.
இடைக்காடனாரின் பாடலை இகழ்ந்தவர் ……………………
இடைக்காடனாரிடம் அன்பு வைத்தவர் ………………..
அ) அமைச்சர், மன்னன்
இ) இறைவன், மன்னன்
ஆ) அமைச்சர், இறைவன்
ஈ) மன்னன், இறைவன்
**Answer**:
ஈ) மன்னன், இறைவன்

## குறுவினா

**Question** 1.
"கழிந்த பெரும்கேள்வியினான் எனக் கேட்டு முழுது உணர்ந்த கபிலன் தன் பால்
பொழிந்த பெரும் காதல்மிகு கேண்மையினான் இடைக்காட்டுப் புலவன் தென்சொல்"
– இவ்வடிகளில் கழிந்த பெரும் கேள்வியினான் யார்?
காதல் மிகு கேண்மையினான் யார்?
**Answer**:
கழிந்த பெரும் கேள்வியினான் (மிகுந்த கல்வியறிவு உடையவர்) – குலேசபாண்டியன்.
காதல்மிகு கேண்மையினான் (கபிலரிடம் நட்பு கொண்டவர்) – இடைக்காடனார்.

**Question** 2.
அமர்ந்தான் – பகுபத உறுப்பிலக்கணம் தருக.
**Answer**:

| | | |
|---|---|---|
| **அமர்ந்தான்** | - | **அமர் + த் (ந்) + த் + ஆன்** |
| **அமர்** | - | பகுதி |
| **த்** | - | சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| **த்** | - | இறந்தகால இடைநிலை |
| **ஆன்** | - | ஆண்பால் வினைமுற்று விகுதி |

## சிறுவினா

Question 1.
மன்னன் இடைக்காடனார் என்ற புலவனுக்குச் சிறப்பு செய்தது ஏன்? விளக்கம் தருக.
Answer:

- குலேச பாண்டியன் தமிழ்ப் புலமை வாய்ந்தவன்.
- அவன் அவையில் புலவர் இடைக்காடனார் பாடிய பாடலை மன்னன் பொருட்படுத்தாமல் அவமதித்தான்.
- இடைக்காடனார் கடம்பவனத்து இறைவனிடம் முறையிட்டார்.
- இறைவன் கடம்பவனம் கோயிலை விட்டு நீங்கி வைகை ஆற்றின் தெற்கே கோயில் உருவாக்கி அமர்ந்தார்.
- இதையறிந்த மன்னன் யான் என்ன தவறு செய்தேன்? ஏன் இங்கு அமர்ந்தீர்? என்று வருந்தினான்.
- இறைவன், இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றமே தவிர, வேறு எந்த தவறும் இல்லை என்றார்.
- தன் தவறை உணர்ந்த மன்னன் இடைக்காடனாரை அழைத்து மங்கல ஒப்பனை செய்து, பொன் இருக்கையில் அமர்த்தி, பணிந்து வணங்கி தம் தவறைப் பொறுத்தருள வேண்டினான்.

## நெடுவினா

Question 1.
இறைவன் புலவர் இடைக்காடன் குரலுக்குச் செவிசாய்த்த நிகழ்வை நயத்துடன் எழுதுக.
Answer:

| குறிப்புச் சட்டம் |
|---|
| மன்னனின் அவையில் இடைக்காடனார்<br>இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல்<br>இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல்<br>இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல்<br>இறைவனிடம் மன்னன் வேண்டுதல்<br>இறைவனின் பதில்<br>பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல்<br>மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல்<br>மன்னன் புலவரிடம் வேண்டுதல் |

மன்னனின் அவையில் இடைக்காடனார் :
வேப்பமாலை அணிந்த குலேச பாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். இதைக் கேள்வியுற்ற இடைக்காடனார் குலேசனின் அவைக்குச் சென்று தான் இயற்றிய கவிதையைப் படித்தார்.

இடைக்காடனாரின் புலமையை அவமதித்தல் :
வேப்பமாலை அணிந்த குலேசபாண்டியன் மிகுந்த கல்வியறிவு உடையவன். தமிழறியும் பெருமான், அடியார்க்கு நல்நிதி போன்றவன், பொருட்செல்வமும் கல்விச் செல்வமும் உடையவன் என்று கேட்டுணர்ந்து தாங்கள் முன் சுவை நிரம்பிய கவிதை பாடினார் இடைக்காடனார். பாண்டியன் சிறிதேனும் பாடலைப் பொருட்படுத்தாமல் புலவரின் புலமையை அவமதித்தான்.

இடைக்காடனார் இறைவனிடம் முறையிடுதல் :
இறைவா! பாண்டியன் என்னை இகழவில்லை. சொல்லின்வடிவான பார்வதியையும், பொருளின் வடிவான உம்மையும் அவமதித்தான் என்று சினத்துடன் இறைவனிடம் கூறினார்.

இறைவன் கோவிலை விட்டு வெளியேறுதல் :
இடைக்காடனாரின் வேண்டுகோளை ஏற்று வைகை ஆற்றின் தெற்கே கோயில் அமைத்துக் குடிகொண்டார் இறைவன். உடனே கபிலரும் மகிழ்ந்து இடைக்காடனாரோடு வெளியேறினார்.

இறைவனிடம் மன்னன் வேண்டுதல் :
இதையறிந்த மன்னன் இறைவனிடம் என் படைகளால், பகைவரால், கள்வரால், விலங்குகளால் தங்களுக்கு இடையூறு ஏற்பட்டதா? மறையவர் ஒழுக்கம் குறைந்தாரோ? தவமும், தானமும் சுருங்கியதோ? இல்லறமும், துறவறமும் தத்தம் வழியில் தவறினவோ? தந்தையே நான் அறியேன் என்றார் குலசேகரபாண்டியன்.

இறைவனின் பதில் :
'வயல் சூழ்ந்த கடம்பவனத்தைவிட்டு ஒருபோதும் நீங்கமாட்டோம்.' 'இடைக்காடனார் பாடலை இகழ்ந்த குற்றம் தவிர உன்னிடம் குற்றம் இல்லை' என்றார். 'இடைக்காடன் மீது கொண்ட அன்பினால் இங்கு வந்தோம்' என்றார்.

பிழையைப் பொறுத்தருள இறைவனிடம் வேண்டுதல் :
வானிலிருந்து ஒலித்த இறைவனின் சொல் கேட்டான் குலேச பாண்டியன். மகிழ்ந்து, பரம்பொருளே! புண்ணியனே! சிறியவரின் குற்றம் பொறுப்பது பெரியவர்க்குப் பெருமை என்று குற்றத்தைப் பொறுக்க வேண்டினான்.

மன்னன் இடைக்காடனாருக்குப் பெருமை செய்தல் :
மன்னனின் மாளிகை வாழை, சாமரை இவற்றாலான விதானமும் விளக்கும் உடையது. பூரண கும்பம் மாலை, கொடி இவற்றால் ஒப்பனை செய்யப்பட்டது. புலவர்கள் சூழ இடைக்காடனாரை மங்கலமாக ஒப்பனை செய்து பொன் இருக்கையில் அமர்த்தினான்.

மன்னன் புலவரிடம் வேண்டுதல் :
மன்னன் புலவர்களிடம், தான் இடைக்காடனாருக்குச் செய்த குற்றத்தைப் பொறுத்துக்கொள்ள வேண்டும் என்றான். புலவர்களும், நீர் கூறிய அமுதம் போன்ற சொல்லால் எங்கள் சினம் தணிந்துவிட்டது என்றனர்.

## இலக்கணக் குறிப்பு.

கேள்வியினான் – வினையாலணையும் பெயர்
காடனுக்கும் கபிலனுக்கும் – எண்ணும்மை
கழிந்த – பெயரெச்சம்

## பகுபத உறுப்பிலக்கணம்.

| தணிந்தது- | தணி + த் (ந்) + த் + அ + து |
| --- | --- |
| தணி | - பகுதி |
| த் | - சந்தி, 'ந்' ஆனது விகாரம் |
| த் | - இறந்தகால இடைநிலை |
| அ | - சாரியை |
| து | - படர்க்கை வினைமுற்று விகுதி |

# 5.4 புதியநம்பிக்கை

## கற்பவை கற்றபின்

**Question** 1.
கல்வி வாய்ப்பற்ற சூழலில் ஒற்றைச் சுடராக வந்து ஒளியேற்றினார் மேரி மெக்லியோட் பெத்யூன், அதுபோலத் தமிழகத்தில் கல்வி வாய்ப்பற்றவர்களின் வாழ்வில் முதற்சுடர் ஏற்றியவர்களுள் யாரேனும் ஒருவர் குறித்த செய்திகளைத் தொகுத்துச் சில படங்களுடன் குறும்புத்தகம் ஒன்றைக் குழுவாக உருவாக்குக.
**Answer**:


அயோத்திதாசர்

இளமை:


- 20.5.1845ல் கோவை அரசம்பாளையத்தில் பிறந்தார்.
- இயற்பெயர் : காத்தவராயன்
- தந்தை : கந்தசாமி
- தன் ஆசிரியர் மீதுள்ள பற்றின் காரணமாக அவர் பெயராகிய அயோத்திதாசர் என்பதைத் தன் பெயராக மாற்றிக்கொண்டார்.

கல்விப் பணி:
தாழ்த்தப்பட்ட குழந்தைகளுக்குக் கல்வி மறுக்கப்பட்ட காலத்தில் அயோத்திதாசர் அயோத்திதாசர் பிரம்ம ஞான சபை ஆல்காட் தொடர்பால், சென்னையில் முக்கியமான ஐந்து இடங்களில் பஞ்சமர் பள்ளிகள் எனத் தாழ்த்தப்பட்ட மக்களுக்கு இலவசப் பள்ளிகளை நிறுவி சிறந்த கல்வியினை வழங்கினார்.

சமூகப்பணி:
தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரும்பாடுபட்டவர். தாழ்த்தப்பட்ட மக்களுக்குக் கல்வி வசதியோடு கல்வி உதவித்தொகை கிடைக்கவும் ஏற்பாடு செய்தார். கல்வியில் தேர்ச்சி பெற்ற தாழ்த்தப்பட்ட மக்களுக்கு அரசு வேலையும் உள்ளாட்சி அமைப்புகளில் வாய்ப்பும் வழங்கச் செய்தார்.

படைப்புகள்:
புத்தரது ஆதிவேதம், திருவாசக உரை, ஒருபைசாத் தமிழன் இதழ்.

**Question** 2.
கல்விக் கண் திறந்தவர்களுக்கிடையில் கைவிடப்பட்ட பெண்களுக்காக உழைத்த தமிழகத்தின் முதல் பெண் மருத்துவர் முத்துலெட்சுமி பற்றிய ஒரு தொகுப்பேட்டினை உருவாக்கி வகுப்பறையில் காட்சிப்படுத்துக.
**Answer**:




## பாடநூல் வினாக்கள்

# நெடுவினா

**Question** 1.
கற்கை நன்றே கற்கை நன்றே
பிச்சை புகினும் கற்கை நன்றே – என்கிறது வெற்றிவேற்கை.
மேரியிடம் இருந்து பறிக்கப்பட்ட புத்தகம், அச்சிறுமியின் வாழ்க்கையில் கல்விச் சுடரை ஏற்றிய கதையைப் பற்றிய உங்களின் கருத்துகளை விவரிக்க.
**Answer**:

| குறிப்புச் சட்டம் |
|---|
| முன்னுரை |
| இளமை வாழ்க்கை |
| மேரிக்கு ஏற்பட்ட அவமானம் |
| மேரியின் ஏக்கம் |
| தந்தையின் அறிவுரை |
| மேரியின் தன்னம்பிக்கை |
| பட்டமளிப்பு விழா |
| மேற்படிப்பு |
| புதியதோர் பயணம் |
| ஊரே கூடுதல் |
| முடிவுரை |

முன்னுரை :
வரலாற்றில் மனிதர்கள் வருகிறார்கள். சிலர் வரலாறாகவே வாழ்கிறார்கள். அந்த வகையில் கல்வி அறிவற்ற, இருட்சமூகத்தில் ஒற்றைச் சுடராய் பிறந்து ஓராயிரம் சுடர்களை ஏற்றி, மேரி மெக்லியோட் பெத்யூன் கதையைப் பற்றி இக்கட்டுரையில் காண்போம்.

இளமை வாழ்க்கை :
மேரி தன் தாய் தந்தையோடு பருத்திக் காட்டில் வேலை செய்யும் கல்வி அறிவற்ற உழைக்கும் குடும்பம். அச்சூழலிலும் மேரி தனக்கென்ற தனி

பாதை வகுப்பாள். அது, எதுவாகினும் தான் முதலில் பார்க்க வேண்டும் என ஆசைப்படுவாள்.

மேரிக்கு ஏற்பட்ட அவமானம்:
மேரி ஒருநாள்தாயுடன் வில்சன்வீட்டிற்குச் செல்கிறாள். அங்குக்குழந்தைகள் விளையாடுவதைக் கண்டு வியப்புற்றாலும் அவள் கண்கள் அங்கு இருந்த புத்தகத்தின் மீதே சென்றது. ஒரு புத்தகத்தை எடுத்துப் புரட்டிப் பார்க்கின்றபோது வில்சனின் இளைய மகள் புத்தகத்தை வெடுக்கென்று பிடுங்கி உன்னால் படிக்கமுடியாது என்று கூறினாள். அந்த வார்த்தை அவள் மனதைக் கிழித்தது. உடனே வீட்டை விட்டு வெளியேறினாள்.

மேரியின் ஏக்கம் :
வில்சனின் வீட்டில் நடந்த அவமானங்களை எண்ணி கண்ணீர் வடித்துத் தன் தந்தையிடம் நான் படிக்க வேண்டும். படித்தால்தான் இச்சமூகம் மதிக்கும் என்று கூறுகிறாள்.

தந்தையின் அறிவுரை :
மேரி நாம் பள்ளிச் செல்லமுடியாது. நமக்கென்று தனியாகப் பள்ளிக்கூடம் இல்லை. வெளியூரில் பள்ளியில் வெள்ளைக்காரர்கள் படிக்கும் பள்ளிதான் இருக்கிறது. அதிலும் நம்மைச் சேர்க்கமாட்டார்கள் என்றார்.

மேரியின் தன்னம்பிக்கை:
பதினொரு வயது நிரம்பிய மேரி வயல்காட்டிலிருந்து பருத்திமூட்டையைச் சுமந்துகொண்டு வீட்டிற்கு வந்தாள். அப்போது வீட்டில் முன்பின் அறிமுகம் இல்லாத பெண் தன்னை அறிமுகம் செய்துகொண்டு, நீ படிக்க வேண்டும்; உன் வேலைகளை முடித்துக்கொண்டு சீக்கிரம் வரவேண்டும் என்றார். மேரிக்கு நா எழவில்லை, வாயடைத்து நின்று வாசிக்கப் புறப்பட்டாள்; படிக்கத் தொடங்கினாள்.
புதிது புதிதாக கற்றாள். தன் பாதையை மெல்ல மெல்ல உயர்த்தினாள். இறுதி வகுப்பு படித்து, சான்றிதழ் பெற்றாள்.

பட்டமளிப்பு விழா :
தோல்வியே வெற்றிக்கு முதல்படி என்பதை உணர்ந்த மேரி, வில்சனின் இளைய மகள் என்னை அவமதிக்காவிட்டால் இந்த ஊக்கம் கிடைத்திருக்காது. அச்சிறுமியின் செயல் எனக்கு நேரிடாவிட்டால் இந்த விருது பெற இயலாது என்று எண்ணி பெருமிதம் அடைந்த மேரிக்கு எழுத படிக்கத் தெரியும் எனப் பட்டம் அளித்துச் சிறப்பித்தது.

மேற்படிப்பு :
பட்டமளிப்பு விழாவின்போது வில்சன் தோளில் மேரியை அணைத்து 'நீ எனக்கு என்ன செய்யப் போகிறாய்' என்றார். "மிஸ் நான் மேலும் படிக்க விரும்புகிறேன்" என்றார். ஆனால் அலைகடலில் அகப்பட்ட கப்பல் கரைசேர இயலாத நிலைபோல் இருந்தாள்.

புதியதோர் பயணம் :
மீண்டும் தன் பணியினைப் பருத்திக்காட்டில் தொடங்கினார்கள். அப்போது மிஸ் வில்சன் அங்கு வந்து, வெள்ளைக்காரப் பெண்மணி ஒரு கருப்பின குழந்தையின் படிப்பிற்காக பணம் அனுப்பி இருக்கிறார். அதைப் பெறுவதற்குரிய ஆளாக நீதான் தேர்ந்தெடுக்கப்பட்டிருக்கிறாய். நீ மேல்படிப்பிற்காக டவுனுக்குப் போகவேண்டும் தயாராகு என்றார் மேரியிடம்

ஊரே கூடுதல் :
மேரி மேல்படிப்பிற்குச் செல்ல தொடர்வண்டி நிலையத்தில் ஊரே ஒன்று கூடியது. அனைவரும் குட்பை மேரி, குட்பை வெற்றி உண்டாகட்டும் என்று வாழ்த்தி விடை கொடுத்தனர்.

முடிவுரை:
சாதாரணப் பெண்ணாகப் பிறந்து சாதனைப் பெண்ணாக மாறியது மேரியின் வாழ்வு.மேலும், சமுதாயத்தின் அறியாமை இருளைப் போக்க தோன்றிய மேரிஜேன்னின் வாழ்வியல் நிகழ்வுகளைப் போல நாமும் அவமானங்களை வெகுமானமாக மாற்ற முயற்சிப்போம்.

**"கற்கை நன்றே கற்கை நன்றே**
**பிச்சை புகினும் கற்கை நன்றே"**

என்பதனை உணர்வோம்! வெற்றி பெறுவோம்!!!

# 5.5 வினா, விடை வகைகள், பொருள்கோள்

## கற்பவை கற்றபின்

**Question** 1.
வினா வகையையும் விடை வகையையும் சுட்டுக.
**Answer**:
“காமராசர் நகர் எங்கே இருக்கிறது?” “இந்த வழியாகச் செல்லுங்கள்.” – என்று விடையளிப்பது.
காமராசர் நகர் எங்கே இருக்கிறது? – அறியாவினா
‘இந்த வழியாகச் செல்லுங்கள் ‘ என்று விடையளிப்பது. – சுட்டுவிடை

“எனக்கு எழுதித் தருகிறாயா?” என்ற வினாவுக்கு, “எனக்கு யார் எழுதித் தருவார்கள்?” என்று விடையளிப்பது.
எனக்கு யார் எழுதித்தருவார்கள் என்று விடையளிப்பது. – வினா எதிர்வினாதல்

**Question** 2.
உரையாடலில் இடம் பெற்றுள்ள வினாவிடை வகைகளைக் கண்டு எழுதுக.
பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். (……………………)
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு? (……………………)
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்! (……………………)
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா? (……………………)
பாமகள் : ஏன் வராமல்? (…………………)
**Answer**:
பாமகள் : வணக்கம் ஆதிரை! ஏதோ எழுதுகிறீர்கள் போலிருக்கிறதே? (அறியா வினா)
ஆதிரை : ஆமாம்! கவியரங்கத்துக்குக் கவிதை எழுதிக் கொண்டிருக்கிறேன். (நேர் விடை)
பாமகள் : அப்படியா! என்ன தலைப்பு? (அறியா வினா)
ஆதிரை : கல்வியில் சிறக்கும் தமிழர்! (நேர் விடை)
நீங்கள் கவியரங்கத்துக்கு எல்லாம் வருவீர்களா? மாட்டீர்களா? (ஐய வினா)
பாமகள் : ஏன் வராமல்? (வினா எதிர் வினாதல்)

# மொழியை ஆள்வோம்

# மொழிபெயர்ப்பு

ஆங்கிலச் சொற்களுக்கு நிகரான தமிழ்ச் சொற்களைக் கவிதையில் கண்டு எழுதுக.

| யாழிசை | It's like new lute music |
|---|---|
| *அறைக்குள் யாழிசை*<br>*ஏதென்று சென்று*<br>*எட்டிப் பார்த்தேன்;*<br>*பேத்தி,*<br>*நெட்டுருப் பண்ணினாள்*<br>*நீதிநூல் திரட்டையே.*<br>பாரதிதாசன் | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation.<br>*Translated by* Kavignar Desini |

lute music – *யாழிசை*
chamber – ............................
to look up – ............................
grand-daughter – ............................
rote – ............................
didactic compilation – ............................

Answer:

| யாழிசை | It's like new lute music | |
|---|---|---|
| அறைக்குள் யாழிசை<br>ஏதென்று சென்று<br>எட்டிப் பார்த்தேன்<br>பேத்தி,<br>நெட்டுருப் பண்ணினாள்<br>நீதிநூல் திரட்டையே.<br>- பாரதிதாசன் | Wondering at the lute music<br>Coming from the chamber<br>Entered I to look up to in still<br>My grand-daughter<br>Learning by rote the verses<br>Of a didactic compilation<br>*Translated by Kavignar Desini* | Lute music - யாழிசை<br>Chamber - கூடம்<br>at look up - எட்டிப் பார்த்தேன்<br>Grand daughter - பேத்தி<br>rote - நெட்டுரு<br>didactic compilation - நீதிநூல் திரட்டு |

# அட்டவணையில் விடுபட்டதை எழுதுக.

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | | சொல்லிச் சென்றார் | | கதையைச் சொன்னார் |
| தா | | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | |
| பார் | துளிர் பார்த்தாள் | | பார்த்துச் சிரித்தாள் | | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | | குழந்தையே வா! | |

Answer:

| வேர்ச் சொல் | எழுவாய்த் தொடர் | பெயரெச்சத் தொடர் | வினையெச்சத் தொடர் | விளித் தொடர் | வேற்றுமைத் தொடர் |
|---|---|---|---|---|---|
| ஓடு | அருணா ஓடினாள் | ஓடிய அருணா | ஓடி வந்தாள் | அருணா ஓடாதே! | அருணாவிற்காக ஓடினாள் |
| சொல் | அம்மா சொன்னார் | **சொன்ன அம்மா** | சொல்லிச் சென்றார் | **அம்மா நில்!** | கதையைச் சொன்னார் |
| தா | **அரசன் தந்தார்** | தந்த அரசர் | தந்து சென்றார் | அரசே தருக! | **தந்ததைக் கேட்டார்** |
| பார் | துளிர் பார்த்தாள் | **பார்த்த துளிர்** | பார்த்துச் சிரித்தாள் | **துளிரே பார்!** | துளிருடன் பார்த்தேன் |
| வா | குழந்தை வந்தது | வந்த குழந்தை | **வந்து நின்றான்** | குழந்தையே வா! | **குழந்தையோடு வந்தான்** |

## தொடர்களில் உள்ள எழுவாயைச் செழுமை செய்க.

கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்
எ.கா: அழகிய குளிர்ந்த கடம்பவனத்தை விட்டு இறைவன் நீங்கினான்.

1. மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்
Answer:
பயன்தரும் மரத்தை வளர்ப்பது நன்மை பயக்கும்

2. வாழ்க்கைப்பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.
Answer:
இன்பமும் துன்பமும் நிறைந்த வாழ்க்கைப் பயணமே வேறுபட்ட பாடங்களைக் கற்றுத் தருகிறது.

3. கல்வியே ஒருவர்க்கு உயர்வு தரும்.
Answer:
நன்னெறிக் கல்வியே உயர்வு தரும்.

4. குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.
Answer:
படைப்புத்திறன் மிக்க குழந்தைகள் தனித்தனியே எழுதித்தர வேண்டும்.

## மதிப்புரை எழுதுக.

பள்ளி ஆண்டுவிழா மலருக்காக, நீங்கள் நூலகத்தில் படித்த கதை / கட்டுரை / சிறுகதை /கவிதை நூலுக்கான மதிப்புரை எழுதுக.

குறிப்பு: நூலின் தலைப்பு – நூலின் மையப்பொருள் மொழிநடை வெளிப்படுத்தும் கருத்து – நூலின் நயம் – நூல் கட்டமைப்பு – சிறப்புக் கூறு – நூல் ஆசிரியர்

## நூலின் தலைப்பு : சந்தித்ததும் சிந்தித்ததும் (கதை)

நூலின் மையப்பொருள்:
வாழ்வில் ஒவ்வொரு நாளும் பலவிதமான மனிதர்களைச் சந்திக்கிறோம். நாம் அவர்களிடம் கற்றுக்கொண்ட பாடம் என்ன என்பதே மையப்பொருள்.

மொழிநடை:
வாசகர் வாசிப்புக்கு ஏற்றநடையில் இலகுவான முறையில் ஆங்கில மேற்கோளுடன் அமைந்த நூல். தெளிந்த நீரோடையினைப் போல கதையின் சொற்றொடர்கள் பொருள் தெளிவுடன் செல்கின்றது.

வெளிப்படுத்தும் கருத்து:
நம்மை வியக்க, விம்ம செய்கின்ற வகையில் நம்மை நாமே பரிசோதனை செய்து, தூண்டும் வகையில் மனதை உருக்கும் வகையில் பதிவு செய்துள்ளார். மானுடர்கள் இன்றைய நிலையில் எப்படி வாழவேண்டும்? எத்தகைய புரிதல்கள் தேவை? தன்னம்பிக்கையும் முயற்சியும் எவ்வாறு வெற்றி தரும்? ஆகிய நற்கருத்துகளை இந்நூல் வெளிப்படுத்துகின்றது.

நூலின் நயம்:
படிக்க விறுவிறுப்பாக, படித்தவுடன் தெளிவடையும் எதுகை, மோனையோடு அமைந்துள்ளது. எளிமையான சொற்கள், எதார்த்தமான கருத்துகள், உன்னதமான நீதிகள், உணர்வான சான்றுகள், சிந்திக்க வைக்கும் உணர்ச்சிப் பெருக்கு ஆகியவை நூலின் நயத்திற்குச் சான்றாகும்.

நூலின் கட்டமைப்பு:
மங்கையர் மலரில் 50 கட்டுரைகளாக வெளிவந்த நூல். மொத்தம் 200 பக்கங்களைக் கொண்டு விஜயா பதிப்பகத்தால் பதிக்கப்பட்டது. அழகிய சிந்தனையைத் தூண்டும் அட்டைப்படம், பார்வைக்கு எளிய, சிறப்பான கட்டமைப்பு கொண்டது இந்நூல்.

சிறப்புக்கூறு:
“ஆரோக்கியமான பார்வையோடு உலகத்தைப் பார்த்தால் அத்தனை

மனிதர்களுமே சுவாரசியத்துக்குப் பஞ்சமில்லாதவர்கள்; உண்மை நமக்குப் புரியும்” என்கிறார் ஆசிரியர். மேலும், “தன்னம்பிக்கை இருந்தால் போதும் தரணியையே ஆளலாம்” என்ற உட்கருத்து மிகச்சிறப்பாகும்.

நூல் ஆசிரியர் :
வெ. இறையன்பு.
வாழ்க்கைக்கு வழிகாட்டும் கருத்துகளை எளிமையாகவும், தெளிவாகவும் கட்டுரையாக்கும் வல்லவர், ஐ.ஏ.எஸ். அதிகாரியும் ஆவார்.

## படிவத்தை நிரப்புக

**நூலக உறுப்பினர் படிவம்**

### ________ மாவட்ட நூலக ஆணைக்குழு

மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் ________

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் | உறுப்பினர் எண் ________

1. பெயர் ________
2. தந்தை பெயர் ________
3. பிறந்த நாள் ________
4. வயது ________
5. படிப்பு ________
6. தொலைபேசி எண் ________
7. முகவரி (அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) ________

நான் ________ நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ.________, சந்தா தொகை ரூ________ ஆக மொத்தம் ரூ. ________ பணமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் :
நாள் :

தங்கள் உண்மையுள்ள

திரு / திருமதி / செல்வி / செல்வன்________ அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

பிணைப்பாளர் கையொப்பம்
(பதவி மற்றும் அலுவலகம்)

அலுவலக முத்திரை

(மாநில / மைய அரசு அதிகாரிகள், கல்லூரி முதல்வர்கள், பேராசிரியர்கள், உயர் / மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள், சட்டமன்ற / நாடாளுமன்ற உறுப்பினர்கள், நகராட்சி / மாநகராட்சி / ஒன்றிய / பேரூராட்சி உறுப்பினர்கள்)

Answer:

**நூலக உறுப்பினர் படிவம்**

**கன்னியாகுமரி மாவட்ட நூலக ஆணைக்குழு**

**மைய / கிளை / ஊர்ப்புற நூலகம் - மாவட்ட மைய நூலம்**

**உறுப்பினர் சேர்க்கை அட்டை**

அட்டை எண் : **514** | உறுப்பினர் எண்: **41512**

| | | | |
|---|---|---|---|
| 1. | பெயர் | : | க. தமிழச்சி |
| 2. | தந்தை பெயர் | : | கு. தமிழரசன் |
| 3. | பிறந்த தேதி | : | 14-04-2005 |
| 4. | வயது | : | 15 |
| 5. | படிப்பு | : | பத்தாம் வகுப்பு |
| 6. | தொலைபேசி எண் | : | 9876543210 |
| 7. | முகவரி<br>(அஞ்சல் குறியீட்டு எண்ணுடன்) | : | 18 பூங்கா சாலை, திருவள்ளுவர் நகர்.<br>கன்னியாகுமரி - 629 001. |

நான் மாவட்ட மைய நூலகத்தில் உறுப்பினராகப் பதிவு செய்ய இத்துடன் காப்புத்தொகை ரூ. 100 சந்தா தொகை ரூ. 10 ஆக மொத்தம் ரூ.110 ரொக்கமாகச் செலுத்துகிறேன். நூலக நடைமுறை மற்றும் விதிகளுக்குக் கட்டுப்படுகிறேன் என உறுதியளிக்கிறேன்.

இடம் : கன்னியாகுமரி,
நாள் : 06-06-2020.

*தங்கள் உண்மையுள்ள,*
தமிழச்சி.

திரு / திருமதி / செல்வி / செல்வன் நளினி அவர்களை எனக்கு நன்கு தெரியும் எனச் சான்று அளிக்கிறேன்.

**ராஜன்**

அலுவலக முத்திரை

*பிணைப்பாளர் கையொப்பம்*
(பதவி மற்றும் அலுவலகம்)

(மாநில / மைய அரசு அதிகாரிகள் கல்லூரி முதல்வர்கள் பேராசிரியர்கள் உயர்/மேல்நிலைப்பள்ளி தலைமை ஆசிரியர்கள் சட்டமன்ற/நாடாளுமன்ற உறுப்பினர்கள் நகராட்சி/மாநகராட்சி/ஒன்றிய/பேரூராட்சி உறுப்பினர்கள்)

# மொழியோடு விளையாடு

புதிர்ப்பாடலைப் படித்து விடையைக் கண்டுபிடிக்க.
தார் போன்ற நிறமுண்டு கரியுமில்லை
பார் முழுவதும் பறந்து திரிவேன் மேகமுமில்லை
சேர்ந்து அமர்ந்து ஒலிப்பேன் பள்ளியுமில்லை
சோர்ந்து போகாமல் வீடமைப்பேன் பொறியாளருமில்லை
வீட்டுக்கு வருமுன்னே வருவதைக் கூறுவேன். நான் யார்?

**Answer**:
காகம்

## தொழிற்பெயர்களின் பொருளைப் புரிந்துகொண்டு தொடர்களை முழுமை செய்க.

1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும்………………… யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் ………………… நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதைத்தல் / புதையல்)
2. காட்டு விலங்குகளைச் ………………… தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் …………………திருந்த உதவுகிறது. (சுட்டல் / சுடுதல்)
3. காற்றின் மெல்லிய………………… பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான ………………… பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல் /தொடுதல்)
4. பசுமையான ………………… ஐக் ………………… கண்ணுக்கு நல்லது.(காணுதல் /காட்சி)
5. பொது வாழ்வில் ………………… கூடாது. ………………… இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல் / நடிப்பு)

**Answer**:
1. நிலத்துக்கு அடியில் கிடைக்கும் <u>புதையல்</u> யாவும் அரசுக்கே சொந்தம் நெகிழிப் பொருள்களை மண்ணுக்கு அடியில் <u>புதைத்தல்</u> நிலத்தடி நீர் வளத்தைக் குன்றச் செய்யும். (புதைத்தல் / புதையல்)
2. காட்டு விலங்குகளைச் <u>சுடுதல்</u> தடை செய்யப்பட்டுள்ளது செய்த தவறுகளைச் <u>சுட்டல்</u> திருந்த உதவுகிறது. (சுட்டல் / சுடுதல்)
3. காற்றின் மெல்லிய <u>தொடுதல்</u> பூக்களைத் தலையாட்ட வைக்கிறது, கைகளில் நேர்த்தியான <u>தொடுத்தல்</u> பூக்களை மாலையாக்குகிறது. (தொடுத்தல் /தொடுதல்)
4. பசுமையான <u>காட்சி</u> ஐக் <u>காணுதல்</u> கண்ணுக்கு நல்லது.(காணுதல் /காட்சி)
5. பொது வாழ்வில் <u>நடித்தல்</u> கூடாது. <u>நடிப்பு</u> இல் அவரை மிஞ்ச ஆள் கிடையாது. (நடித்தல் / நடிப்பு)

## அகராதியில் காண்க.

மன்றல் திருமணம்
அடிச் சுவடு – காலடிக்குறி
அகராதி – அகரவரிசை சொற்பொருள் நூல்
தூவல் – 1 மழை / நீர்த்துளி
மருள் – மயக்கம்

## செயல் திட்டம்

## “பள்ளியைத் தூய்மையாக வைத்திருத்தல்” – குறித்த செயல்திட்ட வரைவு முறை ஒன்றை உருவாக்கித் தலைமை ஆசிரியரின் ஒப்புதலுடன் நடைமுறைப்படுத்துக.

Answer:

அனுப்புநர்
பத்தாம் வகுப்பு மாணவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை – 18.

பெறுநர்
தலைமையாசிரியர் அவர்கள்,
அரசு உயர்நிலைப்பள்ளி,
சென்னை – 18.

ஐயா,

பொருள்: பள்ளித் தூய்மை குறித்த செயல் திட்ட வரைவு ஒப்புதல் வழங்கி செயல்படுத்த
வேண்டுதல் – சார்பாக.

வணக்கம். நாங்கள் நம் பள்ளியில் பத்தாம் வகுப்பு படித்து வருகிறோம். கடந்த 4 ஆண்டுகளாக நம் பள்ளியை நன்கு கவனித்து வருகிறோம். அதன் மூலம் நம் பள்ளி மாணவர்களின் கற்றல் அடைவுகளுக்குத் தடையாக இருக்கும் காரணிகளைப் பற்றி ஆய்வு செய்து வந்தோம். அவற்றை ஒரு செயல்திட்டமாக தயாரித்து தங்கள் பார்வைக்கு அனுப்பி உள்ளோம். அதன் பரிந்துரைகளை ஆராய்ந்து அதற்கு ஒப்புதல் வழங்கி நம் பள்ளியில் செயல்படுத்தி மாணவர்களாகிய எங்கள் கல்வி நலனையும் வருங்கால தலைமுறையினரின் கல்வி நலனையும் காக்குமாறு பணிவுடன் வேண்டுகிறோம்.

நன்றி

இடம் : சென்னை
நாள் : 13.03.2020

இப்படிக்கு,
அரசு உயர்நிலைப்பள்ளி மாணவர்கள்.


# பள்ளித் தூய்மை

நல்ல நீரும் நல்ல காற்றும் சூழலுமே வாழ்விற்கு ஆதாரம். அந்த வகையில் மாணவராகிய நாங்கள் தலைமை ஆசிரியர் ஒப்புதலோடு பின்வரும் செயல்திட்டங்களை மேற்கொள்ள உள்ளோம்.


- வகுப்பறையில் உணவுக்கழிவுகளைப் போடாது இருத்தல்.
- குப்பைத்தொட்டிகளை உலர வைத்துப் பயன்படுத்துதல்.
- கழிப்பறைகளைத் தூய்மையாக வைத்தல்.
- பாதுகாக்கப்பட்ட தூய்மையான நீரைக் குடித்தல்.

மேற்கண்ட செயல்திட்டங்களை நடைமுறைப்படுத்தி பள்ளியையும், பாரதத்தையும் தூய்மையாக்கித் தூய்மை இந்தியாவை உருவாக்குவோம்.

## காட்சியைக் கவிதையாக்குக.



Answer:



மரங்களை வெட்டிவிட்டு

மரம் பற்றி பாடம் நடத்தினால்

நாட்டுக்கு என்ன பலன்?

மரத்தை மறந்தான் மனிதன்

மரம் நமக்கு வரம்

மரம் நடுவோம்! மழை பெறுவோம்!!

## நிற்க அதற்குத் தக

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | |
| | |
| | |

Answer:

| பள்ளியில் நான் | வீட்டில் நான் |
|---|---|
| நேரத்தைச் சரியாகக் கடைப்பிடிப்பேன். | வீட்டுப் பணிகளைப் பகிர்ந்து செய்வேன். |
| உடன்பயிலும் மாணவரின் திறமையைப் பாராட்டுவேன். | அம்மாவுடன் சேர்ந்து பணிகளைச் செய்வேன். |
| எனக்குத் தெரியாதவற்றை தெரிந்த மாணவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்வேன். | பாடத்தொடர்பான ஐயங்களை எனது உடன்பிறந்தவர்களிடம் கேட்டு தெரிந்துகொள்வேன். |
| வகுப்பறைத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். | வீட்டுத் தூய்மையில் கவனம் செலுத்துவேன். |

## கலைச்சொல் அறிவோம்

- Emblem – சின்னம்
- Thesis – ஆய்வேடு
- Intellectual – அறிவாளர்
- symbolism – குறியீட்டியல்

# பாடநூல் வினாக்கள்

## பலவுள் தெரிக

**Question** 1.
“இங்கு நகரப் பேருந்து நிற்குமா?” என்று வழிப்போக்கர் கேட்டது. .............. வினா. ‘அதோ அங்கே நிற்கும்’ என்று மற்றொருவர் கூறியது .................விடை
அ) ஐயவினா, வினா எதிர் வினாதல்
ஆ) அறிவினா, மறைவிடை
இ) அறியாவினா, சுட்டுவிடை
ஈ) கொளல் வினா, இனமொழி விடை
**Answer**:
இ) அறியாவினா, சுட்டுவிடை

## குறுவினா

**Question** 1.
இந்த அறை இருட்டாக இருக்கிறது. மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது? இதோ.
இருக்கிறது! சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா? மேற்கண்ட உரையாடலில் உள்ள வினாக்களின் வகைகளை எடுத்தெழுதுக.
**Answer**:
அ) மின்விளக்கின் சொடுக்கி எந்தப்பக்கம் இருக்கிறது?
– அறியாவினா
ஆ) இதோ.... இருக்கிறதே!
– சுட்டு விடை
இ) சொடுக்கியைப் போட்டாலும் வெளிச்சம் வரவில்லையே! மின்சாரம் இருக்கிறதா, இல்லையா?
– ஐயவினா

## சிறுவினா

**Question** 1.
முயற்சி திருவினை ஆக்கும் முயற்றின்மை
இன்மை புகுத்தி விடும்.
**Answer**:
இக்குறட்பாவில் அமைந்துள்ள பொருள்கோளின் வகையைச் சுட்டி விளக்குக.
இப்பாடலில் அமைந்துள்ள பொருள்கோள் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

பொருள்கோள் இலக்கணம்:
பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை ஆற்றுநீரின் போக்கைப் போல நேராகவே பொருள் கொள்ளுமாறு அமைதல் ஆற்றுநீர்ப் பொருள்கோள்.

பொருள்கோள் விளக்கம் :
இப்பாடலில் முயற்சி செல்வத்தைத் தரும்; முயற்சி செய்யாமை வறுமையைத் தரும் என்று பாடலின் தொடக்கம் முதல் முடிவு வரை நேராகப் பொருள் கொள்ளும் முறையில் அமைந்திருப்பதால் இது ஆற்று நீர்ப்பொருள்கோள் ஆயிற்று.